RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1130

OPEN ACCESS

# பாரதியாரின் நாட்டுப்பற்றும் இனப்போராட்டத் தீர்வுகளும்

ஷி:பா [அ, *]

[அ] தமிழ்த்துறை, டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி, இளையான்குடி, சிவகங்கை-630702, தமிழ்நாடு, இந்தியா

# Bharathiyar's Patriotism and Ethnic Conflict Solutions

**Shifa** [a, *]

[a] Department of Tamil, Dr. Zakir Husain College, Ilaiyangudi, Sivagangai-630702, Tamil Nadu, India

* Corresponding Author:
hasanhazeena2071@gmail.com

Received: 13-08-2021
Revised: 27-07-2022
Accepted: 30-07-2022
Published: 10-09-2022

Check for updates

**ABSTRACT**

Caste has existed since ancient times till today. It can be understood that the origin of caste cruelty was the primary reason for the emergence of the race of ruler and slave on the basis of possession of the land. After that, there was discrimination between superiors and inferiors, and there was division among people in the name of caste and race. Both of them danced wildly, like uncontrollable demons. The land looks like a battlefield. People should live according to the guidance of these wise men so that conflicts and struggles disappear. Mahakavi Bharathi felt sorry for the religious and ethnic conflicts and differences that occurred in many parts of the world during his lifetime. All people should realize the greatness of mankind and live together as brothers and sisters. It was Bharathi's desire to see a peaceful country where people lived in harmony with freedom without conflict and with the resources provided by nature, their thoughts and wealth in the Indian society that was enslaved and divided.Mahakavi Subramania Bharathiyar was one of the many fighters who wanted to put an end to the abolition of caste. His creations are the earthquake that erupted in the mind that shattered caste and ethnicity. The purpose of this article is to show that through his poetry and articles, he pointed out the religious and ethnic struggles and showed the way to recover from them that was relevant to this era.

**Keywords:** Mahakavi Bharathi, Patriotism, Freedom, Ethnic Struggles

## முன்னுரை

உலகில் மக்கள் அமைதியாகவும், இன்பமாகவும் வாழ மகான்களும்,கவிஞர்களும் வழிகாட்டியுள்ளனர். உலகில் மத, இனத்தை அடிப்படையாகக் கொண்டு போராட்டங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இப்பூமியானது யுத்தக்களமாகவே தோற்றமளிக்கிறது. பூசல்களும், போராட்டங்களும் மறைய இம்மகான்கள் வழிகாட்டிய படி மக்கள் வாழ வேண்டும் மகாகவி பாரதி தன் பாடல்களின் மூலம் மத, இன போராட்டங்கள் இருக்கக்கூடாது என்பதைப் பதிவு செய்துள்ளார்.தன் புதிய ஆத்திசூடியில் 'ஒற்றுமை வலிமையாம்' என்று குறிப்பிட்டு, வேற்றுமையில் ஒற்றுமை காண்பவர்கள் நாம் என்பதை உணர்ந்து செயல்படத் தூண்டுகிறார்.

விலங்குகளிடம் கூட பாகுபாடு காட்டக்கூடாது என்பதை, பாரதியின் பூனைக்குட்டி பாடல் உணர்த்தும்.

“வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்

வீட்டில் வளருது கண்டீர்,

பிள்ளைகள் பெற்ற(து) அப் பூனை; - அவை

பேருக்(கு) ஒருநிற மாகும்”

என்று கூறி “எந்த நிறமிருந்தாலும் அவை யாவும் ஓரே தரம் அன்றோ இந்த நிறம் சிறிதென்றும் இஃது ஏற்றம் என்றும் சொல்லலாமோ” என்று கூறி விலங்குகளில் கூட ஒற்றுமை உணர்வைத் தூண்டுகிறார் (Kavignar Padmadevan, 2021). மக்கள் அனைவரும் மானுடப்பிறவியின் மகத்துவத்தை உணர்ந்து, ஒன்றுப்பட்டு வாழ வேண்டும். சண்டைச் சச்சரவு இன்றி, சுதந்திரத்துடன் ஓரினமாக வாழும் அமைதியான தேசத்தைக் காண்பதே பாரதியின் விருப்பமாக இருந்தது.சாதி இனத்தாக்கத்தைத் தகர்த்தெரிய மனத்தில் பொங்கி எழுந்த பூகம்பமே அவருடைய படைப்புகளாகத் திகழ்கின்றன. இப்படைப்பின் வாயிலாக மத, இனச்சாதியப் போராட்டங்களைச் சுட்டிக்காட்டி அவற்றிலிருந்து மீண்டு வாழ வழி வகைக் காட்டியுள்ளமையைக் இக்காலத்திற்குப் பொருந்துமாறு காண்பதே இக்கட்டுரையின் பொருண்மையாக அமைந்துள்ளது.

## இனம் என்பதற்கான விளக்கம்

‘இனம்’ என்பதற்குச் சுற்றம், குலம், கூட்டம், திறள், வகுப்பு, குழு, நிறை, மந்தை, சம்பந்தம் எனப் பல பொருள்கள் உண்டு.

“அரசர்க்குறுதிச் சுற்றம், இன்னம், குலம், கூட்டம்,

தொடர்பு, சுற்றம், நிறை, பசுக்கூட்டம், அமைச்சர்கள்,

வருக்கம்”

என்று கழகத் தமிழ் அகராதி விளக்கம் தருகிறது (Kazhaga pulavar kuluvinar, 2010). மேலும்

“பொது பெரும்பிரிவு மனித, தாவர, இனம், இனக்

கலவரம் தொகுப்பில் அல்லது பட்டியலில் உள்ள

ஒன்று அடையாளம்”

என்று கரியாவின் தற்காலத் தமிழ் அகராதி இவ்வினங்களுக்கான விளக்கத்தைத் தருகிறது (Kazhaga pulavar kuluvinar, 2010).

“இனமையக் கொள்கை எனப்படும் மனித குலத்தின்மிகப்பெரும் பிரிவே இனமாகும். இவ்வகைக் குழுவினர் உடற்கூற்று அமைப்பாலும் உருவத் தோற்ற அமைப்பாலும், மரபுவழித் தொடரும் ஒத்த பண்புகளைக் கொண்டிருப்பர். இம்மரபுவழிப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டே மனித இனம் பலவாறாகப் பிரிகிறது.இம்மரபுவழிப் பண்புகளையே இனவகைப் பாட்டின் அலகுகளாக இனவியலார் பயன்படுத்துகின்றனர்” (Balusamy, 1992).

தற்போதைய வழக்கில் வர்க்கம், மதம், சாதி, நிறம் என்ற பொருள்களிலும் இனம் என்ற சொல் கையாளப்படுகிறது.ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் சில நோக்கங்களுக்காகச் சேர்ந்து தொழில் வழக்காறுகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றால் பிரிந்து வாழும் கூட்டத்தை ‘இனம்’ என்று கொள்வது பொருந்தும்.

## போராட்டங்களுக்கான காரணிகள்

பரந்த, விரிந்த நிலப்பரப்பில் பல்வேறு பிரிவினர்கள் சேர்ந்து வாழும் சூழலில் ஒவ்வொரு தனிமனிதனின் உணர்வுகளும் எண்ணங்களும் மேலோங்கும் பொழுது மாறுபாடுகள், கருத்துகள், முரண்பாடுகள் ஏற்படுவதைத் தடுக்க இயலாத ஒன்றாகும்.

அறிவார்ந்த பெருமக்களிடையே கூட சில நேரங்களில் கருத்து வேறுபாடு எழுவது இயற்கைதான். இது காலப் போக்கில் வளர்ந்து சாதியாகவும், மதமாகவும், இன உணர்வாகவும் வெடிக்கும். இதன் காரணமாகப் போராட்டங்கள் ஏற்படுகின்றன. தன்முனைப்பு, ஆளுமை அதிகாரம், தாங்களே உணர்ந்தவர்கள், தங்கள் பண்பாடே சிறந்தது; தற்பெருமை, அடிமைப்படுத்தும் மனப்பான்மை போன்றவை இனப்போராட்டங்களுக்கான காரணிகளாக வெளிப்படுகின்றன.

“இனமையக் கொள்கை உணர்ச்சியில் தாங்களே உயர்ந்தவர்கள் என்ற உயர்வு மனப்பான்மையே காணப்படும். இவ்வுணர்வானது வெவ்வேறு பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கிடையேயும்,சில சமயங்களில் ஒரே பண்பாட்டுச் சமூகத்தைச் சேர்ந்த வெவ்வேறு மதம் அல்லது குழுக்களுக்கிடையேயும் காணப்படும். பெரும்பான்மையோர் தங்கள் பண்பாட்டு முறையே உயர்வானது மற்றது தாழ்வானது என்று கருதுகிறார்கள். இம்மாதிரியான தங்கள் இனத்தின் பண்பாட்டு முறைகளே பிற பண்பாட்டு முறைகளை விட உயர்ந்தவை என்று கருதும் மனப்பான்மையே ‘இனமையக் கொள்கை‘ ஆகும்” என்பர் (Balusamy, 1992).

பாரதியார் தன் முப்பத்தொன்பது அகவை வரை தான் வாழ்ந்தார். தாம் வாழ்ந்த நாள் சிறிது எனினும் அவரது பன்மொழிப்புலமையும், அகன்ற, ஆழமான வாசிப்பும், பத்திரிகைத் தொழிலும், பல மாநிலங்களில் வாழ்ந்த வாழ்க்கையும் மனிதர்களையும் சமூகத்தையும் உலக நடப்புகளையும் அறிய ஏதுவாயிற்று.

“பாரதி ஜப்பானில் தோன்றிய போராட்டங்கள் பற்றியும் அயர்லாந்தில் வெடித்துக் கிளம்பிய விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தும்,துருக்கி பால்கன் போர் உடன்பாட்டைப் பற்றியும், முதல் உலகப்போருக்கு பின் அமைக்கப்பட்ட சர்வதேச சங்கம் பற்றியும் நோபல் பரிசு பற்றியும், பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் பர்மாவில் நடைபெற்ற டோங்கு என்னும் கலவரம் பற்றியும்,பாரசீகத்தில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றம் பற்றியும், பாரசீகத்தில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றம் பற்றியும், ஆப்பிரிக்காவில் டிரான்ஸ்வாலில் இந்தியர்கள் படும்பாடு பற்றியும், பல்வேறு கட்டுரைகள் எழுதியுள்ளார்.” எனும் கூற்று உலகில் நடந்த பல போராட்டங்கள் பாரதியின் கவனத்தை ஈர்த்தமையை மெய்ப்பிக்கின்றது. பாரதி ஒரு கூட்டுப் பறவையாக வாழாது உலக நடப்புகளைக் கண்டு உணர்ந்தவராகத் திகழ்ந்தார்.

## பாரதியின் இன ஒற்றுமை உணர்வு

பாரதியின் இன ஒற்றுமை உணர்வானது அவரது படைப்புகளின் வாயிலாக அறியலாம். தேசிய கீதங்கள் என்ற தலைப்பில் வந்தே மாதரப் பாடலில் மிக அற்புதமாக

“ஜாதி மதங்களைப் பாரோம்-உயர்
ஜண்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே-அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே”

என்றும் (Kavignar Padmadevan, 2021).

“ஒன்றுபட் டால்உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்- இந்த
ஞானம்வந் தால்பின் நமக்கெது வேண்டும்?”

என்றும் தம் பாடலின் மூலமாக பாடி நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்கத் தூண்டுகிறார் (Kavignar Padmadevan, 2021). வேற்றுமையில் ஒற்றுமை உடையவர்கள் நாம் என்பதை மிக அற்புதமாக எடுத்துரைக்கிறார். இவரது பாடல்களின் வழி ஒற்றுமையை

1. உலக ஒற்றுமை
2. தேச ஒற்றுமை
3. தமிழக ஒற்றுமை

இம்மூன்று நிலைகளில் வெளிப்படுத்துவதை உணரமுடிகிறது.

## உலக அளவில் ஒற்றுமை

உலக மகா கவிஞர்களுள், தன்னுடைய பரந்த மனப்பான்மையாலும் உயர்ந்த ஆழ்ந்த சிந்தனையாலும், படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ள கருத்து வளத்தாலும் மிகச் சிறந்தவராக உலகில் மதிக்கப்படுகின்றார். உலக மக்கள் அனைவரும் மத, இன, போர் நெறிகளைவிடுத்து ஒன்றுபட்டு வாழவழி வகைகளைக் கூறியுள்ளார்.

"உலகிடைத் தோன்றிய

மானிட ரெல்லாம் சோதரர்; மானுடர்

சமத்துவமுடையார்;சுதந்திரம் சார்ந்தவர்"

என்ற வரிகள் இதற்குச் சான்றாகும் (Kavignar Padmadevan, 2021). புதிய ருஷ்யா என்ற பாடலில் 'ஸார்' சக்கரவர்த்தியின் வீழ்ச்சியால் 1917-ல் ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியை,

"ஆகாஎன் றெழுந்ததுபார் யுகப்புரட்சி;

கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்"

என்று யுகப்புரட்சியாகக் கண்டு அந்நாட்டின் இன ஒற்றுமைக்குக் குரல் கொடுத்தவர் ஜெர்மனி பெல்ஜியத்தின் மீது படையெடுத்ததை நியாயமான செயலாக ஆதரித்த அறத்தால் பெல்ஜியம் வெற்றிபெறும் என்று வாழ்த்தினார் (Kavignar Padmadevan, 2021). இங்கிலாந்து அயர்லாந்து சண்டை ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்திய வெறி ஆகியவற்றை எதர்த்துக் குரல் கொடுத்துள்ளார்.

> "மகாகவி பாரதி இம்மண்ணின்மீது மட்டும் அல்லாமல் பூ மண்டலம் முழுவதையும் அன்பு செய்த ஒரு மகான் தமது மக்களை மட்டுமல்லாமல் சகல மக்களோடும் சகோதரத்துவம் கொண்டாடிய ஒரு மானுடத்தோழர்"

என்ற வரிகள் குறிப்பிடத்தக்கது (Kavignar Padmadevan, 2021). எந்த மண்ணில் எந்த இனத்தானாக எந்த சாதியானாகப் பிறந்தாலும் அவன் மனிதனே என்ற ஒருவகைப் பார்வை பாரதியின் மனித நேயத்தையும் அன்பு மனத்தையும் புலப்படுத்துகின்றது. எல்லா இன மக்கள் மீதும் பேரன்பு கொண்டவர்.

ஆப்கானிஸ்தான் புத்தர் சிலை உடைப்பு,அமெரிக்க நிற நெறி போன்றவற்றிற்குத் தீர்வு காணவும், ஐ.நா.சபையின் சமாதான நடவடிக்கைகளுக்கும் பாரதியின் இன ஒற்றுமைச் சிந்தனை தீர்வாக அமையும் என்பதில் ஐயமில்லை கல்வியிலும், பொருளாதாரத்திலும் வளர்ச்சியடைந்த அமெரிக்கா, ரஷ்யா, இத்தாலி போன்ற நாகரிக நாடுகளில் கூட மத, இனப்போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கல்வியாளர் பாரதியின் இச்சீரிய சிந்தனைகளை உலகளவில் பரப்பி, மனிதன், மனிதனாக வாழ மண்ணுலகம் தழைக்க வழிவகை செய்ய முயற்சி எடுக்க வேண்டும்.

உலக மக்கள் அத்தனைப் பேரும் இன்பமுடனும் மகிழ்ச்சியுடனும் உலகில் மத,இனச் சண்டைகள் நீங்கி ஒற்றுமையுடன் வாழ்வதற்கு ஓரே வழி சகோதர மனப்பான்மையுடன் கூடிய அன்பு நெறி யாருக்கும் தீங்கிழைக்காத நெறி இவை இரண்டும் பாரதியின் தெளிவான கோட்பாடாகும். இதனை,

"பாருக்குள் ளேசமத் தன்மை - தொடர்

பற்றும் சகோதரத் தன்மை

யாருக்கும் தீமைசெய் யாது - புவி

யெங்கும் விடுதலை செய்யும்"

என்ற பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகிறது (Kavignar Padmadevan, 2021). வலியார், எளியாரை வம்புக்கழைத்துச் சண்டைகள் இட்டு மடிவதை,

"உடன்பிறந் தார்களைப் போலே - இவ்

உலகில் மனிதர்எல் லாரும்;

திடம்கொண் டவர்மெலிந் தோரை - இங்குத்

தின்று பிழைத்திட லாமோ?"

என்று கேட்டு, எல்லோரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிறப்புகள் என்ற தூய எண்ணத்துடன் வாழ வேண்டும் என்று அறிவுறுத்திக் கூறுகின்றார் (Kavignar Padmadevan, 2021).

"உடன்பிறந் தார்களைப் போலே - இவ்

வுலகில் மனிதர்எல் லாரும்;

இடம்பெரி(து) உண்டுவை யத்தில் - இதில்

எதுக்குச் சண்டைகள் செய்வீர்?"

என்ற பாடல் வரிகள் மூலம் கேள்வி எழுப்புகிறார் (Kavignar Padmadevan, 2021). உலக மக்கள் அனைவரும் தேவையற்ற பிரிவுகளை விடுத்து சமத்துவத்துடனும்,சுதந்திரத்துடனும் வாழ வேண்டுமென்பதே பாரதியின் இன ஒற்றுமைக் கொள்கையாக அமைந்துள்ளது. சகோதர மனப்பான்மையுடன் வாழ்வதே ஒற்றுமையின் முதற்படி என்பதை,

"மானிட ரெல்லாம் சோதரர் - மானுடர்

சமத்துவ முடையார்,சுதந்திரஞ் சார்ந்தவர்

சீடர்கள்! குலத்தினும் செயலினு மனைத்தினு

மிக்கணந் தொட்டுநீர் யாவரு மொன்றே

பிரிவுகள் துடைப்பீர்"

என்று மக்களுக்கு ஒற்றுமை உணர்வை எடுத்துரைக்கின்றார் (Kavignar Padmadevan, 2021). எந்த நாடும் தன் சொந்த நாடென்றும்,எந்த மனிதனும் சொந்த மனிதனென்றும் பாரதி கருதுவது மிக மிக உயர்ந்த மனப்பான்மையாகும்.

## தேச அளவில் ஒற்றுமை உணர்வு

பாரத சமுதாயம் உலகில் ஒப்பில்லாத புதுமையான சமுதாயம் எனத் தன் நாட்டின் பெருமைகளைப் புகழ்ந்து கூறியுள்ளார். நாட்டுப்பற்று, தேச விடுதலை, மக்களிடையே ஒற்றுமை, சமுதாய மேம்பாடு, பெண்கள் முன்னேற்றம் எனத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர். குறைவான அகவை தான் வாழ்க்கையை வாழ்ந்தவர். ஆனால் தன்னலம் இல்லாத ஒரு சிறந்த வாழ்க்கை வாழ்ந்து காட்டியவர்.

"நாடு மேனிலை எய்தவும் நாட்டு மக்கள் நலமுற்று

வாழவும் வழிகாட்டுவதற்காகவே அவர் கவிதைகளும்

வசனமும் எழுதினார்"

என்று வல்லிக்கண்ணன், பாரதியை புகழ்ந்து கூறுகின்றார் (Kavignar Padmadevan, 2021).

தென்னகத்தில் பிறந்து வடக்கே காசியிலும் வாசம் செய்தவர். இந்தியச் சுதந்திரத்தின்போது பல மாநிலங்களில் நடந்த மாநாடுகளில் பங்கெடுத்துக்கொண்டவர். இந்திய மக்கள் ஒன்றுபட்டு போராடி விடுதலையடைந்து ஒற்றுமையோடு வாழவேண்டும் என அழுத்தமாக குரல் கொடுத்தவர்.

“ஒன்றென்று கொட்டுமுரசே - அன்பில்

ஓங்கென்று கொட்டு முரசே

நன்றென்று கொட்டு முரசே - இந்த

நானில மாந்தருக் கெல்லாம்”

என்று இந்திய மக்கள் அனைவரும் ஒன்றே.ஒருவருக்கொருவர் உண்மையான அன்பு செலுத்த வேண்டும் (Kavignar Padmadevan, 2021). இந்தியாவில் பிறந்த அனைவரும் பாரதத் தாயின் பிள்ளைகள். ஒரு தாயின் பிள்ளைகளுக்கு மறந்தும் மதத்தால் இனத்தால் சாதியால் வேற்றுமை பாராட்டுதல் கூடாது என்று முழங்குகிறார்.

“கிறிஸ்துவர்களாயினும், பார்ஸிகளாயினும், முகமதியினராயினும் எங்கிருந்து வந்து இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும் பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத சாதியிலே சேர்த்துக் கணக்கிட வேண்டும். இது ஒரே சாதி பிரிக்க முடியாதது; அழிவில்லாதது” என்கிறார்.

நம் நாட்டின் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று மதவாதம்.இந்து முஸ்லீம் கலவரங்கள் நாடெங்கிலும் பரவலாக உள்ளன.இவை பொதுமக்களின் அமைதியான வாழ்க்கையைச் சீர்குலைப்பதுடன் பொதுச்சொத்துகளுக்கும் சேதம் ஏற்படுத்துகின்றன. இதுபோன்ற பிரச்சினைகள் பிற்காலத்தில் நிகழும் என்பதை நன்கு உணர்ந்த பாரதி,

“வட இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களில் ஹிந்து முகமதியர்கள் ஒருவிதமான பரஸ்பரதுவேஷம் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். இந்த விரோதங்களை நீக்கி இந்த இரண்டு சாதி யாருக்குள்ளே அநேக உணர்ச்சியும், சகோதர பான்மையும் ஏற்படுத்துவது இத்தேச அபிமானிகளின் முக்கியக் கடமையாகும்” என வலியுறுத்துகிறார்.

இந்திய நாட்டு மக்கள் அனைவரும் பிறப்பால் ஒன்றே நிறத்தால் செய்தொழிலால் ஏற்றத்தாழ்வு கற்பித்தல் கூடாது. அனைவரும் சமம் என்பதை,

“எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்

எல்லாரும் இந்திய மக்கள்

எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை

எல்லாரும் இந்நாட்டு மன்னர் - நாம்

எல்லாரும் இந்நாட்டு மன்னர் - ஆம்

எல்லாரும் இந்நாட்டு மன்னர்”

இப்பாடல் மூலம் நாட்டுப்பற்றை உணர்த்துகின்றார் (Kavignar Padmadevan, 2021).

பாரதி பற்றி கூறிய ஜெயகாந்தன் அவர்கள் இப்பெரிய பாரதத்தில் அந்தணர், சத்திரியர், வணிகர், வேளாளர் எனும் பிரிவுகள் தொழில்களால் வேறுபட்டிருக்கலாம். தொழிலாலும், சாதியாலும் வகுப்புப் பிரிவினை இன மாறுபாடு ஏற்றத்தாழ்வு கற்பித்தலை பாரதி விரும்பவில்லை என்பதை பின்வருமாறு கூறுகின்றார்.

“மனித சமூகம் நாலு வகுப்புகளாகப் பிரிந்தும் உயர்ந்தும் ஒன்றாக வாழ்வதுதான் எக்காலத்திற்கும், எந்த சமூகத்திற்கும் நிலவுகிற பொது நியதியாகும், இந்த நாலு வகுப்பும் இங்கு ஒன்றே. இவற்றிற்கிடையே உயர்வு தாழ்வு வந்தால் ஏதோ ஒன்றை நோக்கி மற்ற அனைத்துப் பிரிவினரும் அவாவைத் தங்கள் கடமைகளை, கைவிட்டு தடுமாறி வீழ்வார்.

எனவே இப்பிரிவுகளை உயர்வாகப் பாதுகாத்து இவை யாவும் சமம் என்று பாவிக்க வேண்டும்" என்பர் (Jayakanthan, Balasubramaniyam, 2009).

"நாலு வகுப்பும்இங்(கு) ஒன்றே - இந்த

நான்கினில் ஒன்று குறைந்தால்

வேலை தவறிச் சிதைந்தே - செத்துவீழ்ந்திடும் மானிடச் சாதி"

என எச்சரிக்கிறார் (Kavignar Padmadevan, 2021).

சிந்தனையால், நல் எண்ணத்தால், நற்செயல்களால் மக்கள் நிறப் பாகுபாடு கொள்ளுதலை விடவேண்டும் என அறிவுறுத்துகின்றார். இதனை,

"நிறத்திற்காக பிறவிக்காக மனிதரை தாழ்வுபடுத்துவது

இந்தியரின் வழக்கமில்லை"

என ஆணித் தரமாகக் கூறியுள்ளார் (Jayakanthan, Balasubramaniyam, 2009). மேலும்

"வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்

மானுடர் வேற்றுமை இல்லை

எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் - இங்கு

யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்"

என்று மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வலியுறுத்துகின்றார் (Kavignar Padmadevan, 2021).

"பாரத நாகரிகத்தின் உயிர்ப்பு சமதர்மம் ஆகும்.

மாந்தரிடையே பேதமற்ற சகோதரத்துவம் அதன்

மார்க்கமாகும் இதுவே உண்மையான விடுதலை"

என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும் (Jayakanthan, Balasubramaniyam, 2009).

## தமிழக ஒற்றுமை

தமிழகத்தில் மத,சாதிய கலவரங்களும்,மோதல்களும் எங்கு நோக்கினும் உள்ளன.சாதியச் சங்கங்களும்,கட்சிகளும்,புற்றீசல்போல முளைக்கின்றன.சாதிய அமைப்புகளின் ஊர்வலங்கள்,சண்டைகள் போன்றவற்றால் பொது மக்களின் இயல்புவாழ்க்கை பாதிப்புக்குள்ளாகிறது.

அரசு மற்றும் தனியார் உடைமைகள் சேதப்படுத்தப்படுகின்றன.தமிழகத்தில் நீண்டகாலமாகப் பிரிவுகள் பல இருந்தபோதிலும் தற்பொழுது நிகழ்வதுபோலச் சண்டைகளும் மோதல்களும் நடந்ததாக இல்லை. பாரதி காலத்தில் இருந்துள்ளன என்பதை,

"ஜாதிச்சண்டை போச்சோ? - உங்கள்

சமயச் சண்டை போச்சோ?"

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது (Kavignar Padmadevan, 2021). எதர்காலத்தில் ஒற்றுமைக்கு குந்தகம் விளையும் என்பதை உணர்ந்த பாரதி இனப் போராட்டங்களின் ஆபத்துக் குறித்து எச்சரிக்கை விடுவது போல்,

"ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே ஜாதி இரண்டொழிய

வேறில்லை என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்"

என அறிவுறுத்தி, சாதியை நோய்க்கு ஒப்பிட்டு கூறுகிறார் (Kavignar Padmadevan, 2021).

"ஆறில் ஒரு பங்கு எனும் கதையில் நாம் நமக்குள்ளே ஒரு பகுதியினை நீசர்கள் பாவித்தோம்; தீண்டாத வகுப்பினர் என்று பாவித்தோம்; தீண்டாத வகுப்பினர் என்று என்று விலக்கினோம்.

இப்போது நம்மெல்லோரையுமே உலகத்தார் இழிந்த நீசர்களாகக் கருதுகிறார்கள்" எனத் தம் காலத்திலிருந்த சாதியால் வேற்றுமை காணும் மக்களின் போக்கினை எடுத்துரைக்கின்றார். குழந்தைகளின் மனதில் விதைத்தால் தான் எதிர்கால சமுதாயம் மேம்படும் என்பதை உணர்ந்த பாரதி,பாப்பாப் பாட்டில்,

"ஜாதிகள் இல்லையடி பாப்பா - குல

தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்று குறிப்பிட்டு அக்குழந்தைகள் நெஞ்சில் இக்கருத்தைப் பதிய வைக்கிறார் (Kavignar Padmadevan, 2021).

மக்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதன் மூலம் சாதிகள் ஒழியும். வளம் பெறுகும், இன்பம் ஏற்படும் என்பது பாரதியின் கீழ்க்கண்ட பாடலில் வெளிப்படுகிறது.

"சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு

தன்னில் செழித்திடும் வையம்

ஆதர(வு) உற்றிங்கு வாழ்வோம் - தொழில்

ஆயிரம் மாண்புறச் செய்வோம்"

என்று சாதிகளை ஒழிப்பதன் மூலம் தான் நிறைய நிறைய நன்மைகள் கிடைக்கும் என்பதைக் குறிப்பிடுகின்றார் (Kavignar Padmadevan, 2021).

## முடிவுரை

இவ்வுலகில் மனிதர்கள் அனைவரும் ஒன்றுபட்டு அமைதியாகவும்,இன்பமாகவும் வாழத் தடையாக இருப்பவை மதங்களாலும்,சாதிகளாலும் ஏற்படும் இனப்போராட்டங்களே என்பது பாரதியின் எண்ணமாகும். இனப்பிரிவுகளால் எழும் மோதல்களைக் களைந்து உலக மக்கள் அனைவரும் சகோதரத்துடன் வாழத் தம் கவிதைகள், உரைநடைகள் வாயிலாகத் தீர்வு காண முயன்றுள்ளார். நிறவர்க்கப் பாகுபாடுகள் நீங்கி,சாதிப் பாகுபாடுகள் மறைந்து ஒற்றுமையாக வாழக் கல்வி வளர்ச்சியுடன் கூடிய அறிவும், சிந்தனைத் திறமும் வேண்டும் என்று கூறுகிறார். பாரதி கூறிய இவ்வழியில் சென்றால் உலகம் முழுவதும் அமைதி அடையும். இன்பம் அதிகமாகவே கிட்டும் என்பதை மிகத்தெளிவாக பாரதி எடுத்துரைக்கின்றார்.

## References


Balusamy, N., (1992), Vazhviyal Kalanjiyam, Volume 12, Tamil University, Thanjavur, India.

Jayakanthan, Balasubramaniyam, (2009) Mahakavi Bharathiyarin Katturaikal, Sakithya Academy, New Delhi, India.

Kavignar Padmadevan, (2021) Bharathiar Kavithaikal Moolamum Uraiyum, Karpagam Puthagaalayam, Chennai, India.

Kazhaga Pulavar Kuluvinar, (2010) Kazhaga Tamil Agarathi, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License